# ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் முன்பு ரூ.9.7 கோடி மதிப்பில் நடை மேம்பாலம்

## ◆ முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார்



■ முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி நேற்று தலைமைச் செயலகத்தில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்பில், ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி சாலையில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தை காணொலிக் காட்சி மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

சென்னை, பிப.5-

முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி நேற்று தலைமைச் செயலகத்தில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்பில், ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி சாலையில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் 9 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தை காணொலிக் காட்சி மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில், பெருகி வரும் வாகன போக்குவரத்தினால் பல்லாயிரக் கணக்கான பாதசாரிகள் சாலையினை பாதுகாப்பாகவும், எளிதாகவும் கடக்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பல நடைமேம்பாலங்கள் தேவை என கண்டறியப்பட்டது. அவ்வாறு கண்டறியப்பட்டவைகளில், ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள ஆலந்தூரில் நடைமேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இரண்டு வழித்தடங்களும் உயர்மட்ட நிலையில் ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் சந்திக்கின்றன. இங்கு ஒருவழித்தடத்திலிருந்து மற்றொரு வழித்தடத்திற்கு எளிதாக மாறிச் செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மெட்ரோ ரயில் நிலையத்திற்கு முன்புறம் உள்ள அதிக போக்குவரத்துமிக்க ஜி.எஸ்.டி சாலையின் எதிர்புறத்தில் உள்ள ஆசர்கானா பேருந்து நிறுத்தத்திற்கு பயணிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக சென்றடைவதற்கு ஒரு நடை மேம்பாலம் பயனுள்ளதாக அமையும்.

ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி சாலையில், இந்த நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்காக, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் 9 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நடைமேம் பாலத்தை முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி நேற்று காணொலிக் காட்சி மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இப்புதிய நடைமேம்பாலம் 55.41 மீட்டர் நீளமும், 6.41 மீட்டர் அகலமும் கொண்டது. மேலும், பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு மின்தூக்கிகள், 4 நகரும் படிக்கட்டுகள், சிசிடிவி கேமராக்கள், நடைபாதையின் அனைத்து பகுதிகளிலும் எல்.இ.டி. மின் விளக்குகள், மாற்றுத்திறனாளிகள் நடைபாதையிலிருந்து மின்தூக்கிக்கு செல்வதற்கு ஏதுவாக சாய்தளம் மற்றும் நடைபாதையில் எவர்சில்வர் கைப்பிடிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார், தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத், தலைமைச் செயலாளர் க.சண்முகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் த.கார்த்திகேயன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.